*14*

# யேசபேலை உறுப்பினராகக் கொண்டிருந்த சபை

## (2:18–29)

*நமது படிப்புகளில் நாம், ஆசியா மைனர் பகுதியில் புகழ்பெற்று விளங்கிய எபேசு, சிமிர்னா மற்றும் பெர்கமு என்ற மூன்று நகரங்களைச் சென்று கண்டுள்ளோம். இப்போது நாம் உள்நாட்டை நோக்கித் திரும்பி, தியத்தீரா நகரத்தை அடையும் வரையில் தென்கிழக்குத் திசையை நோக்கி நகருவோம்.[1] தியத்தீரா சற்றே செல்வம் மிகுந்த நகரமாக இருந்தது, ஆனால் இதை, தொடக்ககால சபையின் நாட்களில், பெரும்பான்மையான மக்கள், பெர்கமுவில் இருந்து சர்தை செல்லும் சாலையில் இருந்த முக்கியத்துவமற்ற ஒரு ஓய்வு நிறுத்தம் என்றே நினைத்தனர். இது, ஆசியாவின் ஏழு சபைகள் இருந்த இடங்களிலேயே, "மிகவும் குறைவாய் அறியப்பட்டு, குறைவான முக்கியத்துவம் உடைய, குறைவாகக் குறிப்பிடத்தக்கதாக" இருந்தது."[2]*

*நானும் என் மனைவியும் துருக்கி சென்று பார்த்தபோது, தியத்தீரா முக்கியமற்றதாயிருந்தது என்று எங்கள் பயண வழிகாட்டியும்கூட நினைத்தார். இஸ்மீரில் இரவு வேளையில், பெர்கமு மற்றும் தியத்தீரா ஆகிய நகரங்களுக்கு அடுத்த நாள் பயணப்படுவதற்கான பயற்றுவிப்பு வேளையில், எங்கள் குழுவினரிடத்தில், "தியத்தீரா நகரத்திற்குச் செல்லத் தேவையில்லை என்று பயணவழிகாட்டி கூறுகின்றார். அங்கு பார்ப்பதற்கு மிகவும் கொஞ்சமானவைகளே உள்ளன, அங்கு செல்வதென்பது நாளை இரவு திரும்பி வருவதை மிகவும் தாமதமாக்கிவிடும்" என்று கூறப்பட்டது. நான், "மற்றவர்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஆனால் ஏழு சபைகள் இருந்த எல்லா இடங்களையும் காண்பதற்கே நான் வந்தேன்!" என்று வெடித்தேன்.*

*மற்றவர்களும் இதுபோலவே உணர்ந்தனர், எனவேஅடுத்த நாளில், பெர்கமுவைச் சென்று பார்த்த பின்பு, இஸ்மீருக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்னர், மகிழ்ச்சியற்ற பயணவழிகாட்டி எங்களைத் தியத்தீரா நகரத்திற்கு நீண்ட ஒரு பக்கப்பயணமாக அழைத்துச் சென்றார். நாங்கள் சென்று சேர்ந்தபோது, இருள் சூழ்ந்திருந்தது, எங்கள் பயண வழிகாட்டி கூறியது சரியாகவே இருந்தது: காண்பதற்குச் சிறிதளவே எஞ்சியிருந்தது - கொஞ்சம் பழைய பாறைகள், கடந்தகாலத்தை மங்கலாக ஒளியூட்டி நினைவுபடுத்தும் ஒரு சில விஷயங்கள்.[3] இஸ்மீருக்கு நாங்கள் தாமதமாகத் திரும்பி வரவேண்டியிருத்தல் பற்றி அவர் கூறியதும் சரியாகவே இருந்தது; அடுத்த*

நாளில் நாங்கள் யாவரும் மிகவும் களைப்புற்றவர்களாய் இருந்தோம். இருந்தபோதிலும், நாங்கள் (தியத்தீராவுக்குச்) சென்றிருந்தது பற்றி நான் மகிழ்ச்சியாய் இருந்தேன். நிழலான சிதிலங்களுக்கு மத்தியில் நின்றுகொண்டு, ஹார்வீ போர்ட்டர் வாசித்ததைக் கேட்டபோது எனது இதயம் உலுக்கப்பட்டது:

> தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: அக்கினிஜுவாலைபோன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது, உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், ... அறிந்திருக்கிறேன் (2:18, 19).

சகோதரர் போர்ட்டர் அவர்கள் மற்ற எந்தக் கடிதத்தையும் வாசிப்பதற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைக் காட்டிலும் அதிகமான நேரத்தை, தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தை வாசிப்பதற்கு எடுத்துக்கொண்டார். எபேசுவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதம் ஏழு வசனங்களை மாத்திரம் கொண்டுள்ளது; சிமிர்னாவுக்கு எழுதப் பட்டது நான்கு வசனங்களைக் கொண்டுள்ளது; பெர்கமுவுக்கு எழுதப் பட்டது ஆறு வசனங்களைக் கொண்டுள்ளது; ஆனால் திய்த்தீராவுக்கு எழுதப்பட்ட கடிதம் பன்னிரண்டு வசனங்களைக் கொண்டுள்ளது. இது எல்லாக் கடிதங்களிலும் நீண்ட மற்றும் மிகவும் அறிவுறுத்துதல் உள்ள கடிதமாகும். முதல் நூற்றாண்டில் இருந்த எழுத்தாளர்களுக்கும், இருபதாம் நூற்றாண்டில் எங்கள் பயண வழிகாட்டிக்கும் தியத்தீரா நகரம் முக்கியமற்றதாக இருந்திருக்கலாம், ஆனால் அது இயேசுவுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது! இயேசு நியுயார்க், இலண்டன், டோக்கியா மற்றும் சிட்னி போன்ற நகரங்கள் மீது ஆர்வம் உடையவராய் இருப்பதுடன் நிறுத்திக்கொள்வதில்லை. அவர் அதற்குச் சமமான ஆர்வத்தை, அர்க்கன்சாஸின் ஜட்சோனியா, கயானாவின் டெமெரரா, நைஜீரியாவின் போர்ட் ஹர்கோர்ட், மற்றும் இந்தியாவின் ஹைதராபாத் ஆகிய நகரங்களின்மீதும் கொண்டுள்ளார்.

தொடக்ககால எழுத்தாளர்கள் தியத்தீராவைப் பற்றி அதிகம் கூறாதிருக்கலாம், ஆனால் அவர்கள் கூறியுள்ளது ஒளியூட்டக்கூடியதாக இருக்கிறது. தியத்தீரா பெரிய நகரமாக இல்லாதிருந்தாலும், அது வியாபாரம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றிற்கு மையமாக விளங்கிற்று. நடபடிகளின் புத்தகத்தில் நாம், “அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ”யைப் பற்றி வாசிக்கின்றோம் (நடபடிகள் 16:14அ). அந்த நகரம், கம்பளித்தொழிலிலும் விலையுயர்ந்த இரத்தாம்பரச் சாயத்தொழிலிலும் நன்கு அறியப்பட்டிருந்தது, இந்த இரத்தாம்பரச் சாயம் என்பது கூட்டுமீன் வகையைச் சேர்ந்த மிகவும் அரிய இனத்தைச் சேர்ந்த மீனில் இருந்து துளித்துளியாக வடித்து எடுக்கப்பட்டது.

தியத்தீரா நகரம் தனது வர்த்தகக் குழுமங்களினிமித்தம் நன்கு

அறியப்பட்டிருந்தது. அங்கிருந்த குழுக்கள், "அனேகமாக, பழங்கால உலகத்தில் இருந்த வேறு எந்த நகரத்தின் குழுவைக் காட்டிலும் அதிகம் விரிவானதாக, நன்கு ஒருங்கமைக்கப்பட்டதாக" இருந்தன.[4] தோல் தொழிலாளர்கள், கம்பளி மற்றும் லினன் நெசவாளர்கள், உலோக வேலையாட்கள், பானைகள் வனைபவர்கள், சாயம் ஏற்றுபவர்கள், உடை தயாரிப்பவர்கள், அடுமனையாளர்கள் மற்றும் பிற தொழில்கள் யாவற்றிற்கும் குழுக்கள் ஒருங்கமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் அதிகாரம் நிறைந்தவையாக இருந்தன: ஒரு மனிதன் இந்தக் குழு ஒன்றின் உறுப்பினராய் இருந்தால் தவிர, அவர் வேலைவாய்ப்பைக் கண்டடைய முடியாது.[5] எடுத்துக்காட்டாக, அடுமனையாளர் குழுவைச் சேர்ந்தவராய் இராதவர் அடுமனையாளராக வேலை செய்ய முடியாது.

"ஒவ்வொரு குழுவும் தனக்குச் சொந்தமான தெய்வீகத்துவ புரவலரை/பாதுகாவலரை, திருவிழாக்களை மற்றும் பாலுறவு வெறிகள் உள்ளடக்கிய பருவகாலக் கொண்டாட்டங்களைக் கொண்டிருந்தது"[6] என்பதே கிறிஸ்தவர்களுக்குப் பிரச்சனையாக இருந்தது. குழுக்களின் கூட்டத்தில், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசித்தலும் சிலவேளைகளில் ஒழுக்கவீனமும் உள்ளடங்கியிருந்தன.[7] இரண்டாம் நூற்றாண்டின் போது, கிறிஸ்தவர்கள் இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்களாய் இருக்கக் கூடாது என்று கிறிஸ்தவ நடத்துநர்களில் பலர் போதித்தனர் - ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், கிறிஸ்தவர்கள் இன்னமும் இக்கட்டான நிலையுடன் போராடிக்கொண்டிருந்தனர். அவர்களின் நெருக்கடி நிலையை நன்கு புரிந்துகொள்வதற்கு, நீங்கள் ஒரு முஸ்லீமாக, ஒரு புத்தமதத்தினராக அல்லது பஹாய் நம்பிக்கையின் உறுப்பினராக இல்லாதிருந்தால், உங்களால் ஒரு வேலையைப் பெற முடியாது என்ற சூழ்நிலை உங்களுக்கிருந்தால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்துபாருங்கள்.[8] விஷயம் அப்படியிருந்தால், நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு உணவளிப்பதற்காக உங்கள் விசுவாச விஷயத்தில் சமரசம் செய்துகொள்வீர்களா, அல்லது அவர்களைப் பட்டினி கிடக்கச் செய்வீர்களா?

கடிதங்களிலேயே மிகவும் நீண்டதான இக்கடிதத்தைப் பற்றி நாம் படிக்கையில், மேற்கண்ட கேள்வியை உங்கள் சிந்தையில் காத்துக் கொள்ளுங்கள்.

## வாழ்த்துதல் (2:18அ)

இந்தக் கடிதம் பின்வரும் வாழ்த்துதலுடன் தொடங்குகிறது: "தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ..." (வசனம் 18அ). தியத்தீராவில் சபை எப்போது நிலைநாட்டப்பட்டது என்பது நமக்கு தெரியாது. லீதியாளும் அவளது வீட்டாரும் தங்கள் இல்லம் திரும்பிய போது, தங்கள் விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டிருக் கலாம், அல்லது பவுல் எபேசுவில் இருந்தபோது இந்த சபை தொடங்கி யிருக்கலாம் (நடபடிகள் 19:10).

## *இயேசுவைப் பற்றிய விவரிப்பு (2:18ஆ)*

*பின்பு இயேசு தம்மை இக்கடிதத்தின் எழுத்தாளர் என்று அடையாளப் படுத்திக் கொள்வதற்காக முதல் அதிகாரத்திலிருந்து சில சொற்றொடர் களைப் பயன்படுத்தினார், அத்துடன் பின்வரும் முக்கியமான கூடுதல் விஷயத்தையும் கூறினார்: "அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள[9] தேவகுமாரன் சொல்லுகிறதாவது, ..." (வசனம் 18ஆ). (பக்கம் 149 காணவும்.) "தேவகுமாரன்" என்பது கூடுதலான சொற்றொடராக உள்ளது. அதிகாரம் 1ல் உள்ள "மனுஷகுமாரனுக் கொப்பானவர்" இயேசுவாகத்தான் இருந்தார் என்பதில் நாம் ஏதேனும் சந்தேகம் கொண்டிருந்தால், அந்தச் சந்தேகம் இப்போது நீக்கப்படுகிறது.*

*இயேசு தம்மைப் பற்றி, வல்லமை நிறைந்த மூன்று சத்தியங்களை அந்த சபைக்குழுமத்திற்கு நினைவூட்டினார்: (1) அவர் தவறாதவராய் இருக்கின்றார்; அவர் "தேவகுமாரனாக" இருக்கின்றார். (2) அவர் எல்லாம் அறிந்தவராக இருக்கின்றார்; அவர், "அக்கினிஜுவாலைபோன்ற கண்களைக்" கொண்டுள்ளார். (தமிழ் வேதாகமத்தில் உள்ளபடி) அடுத்த வசனத்தின் கடைசியில் "அறிந்திருக்கிறேன்" என்றுள்ளது. வசனம் 23ல் இயேசு, "நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவ ரென்று" வலியுறுத்தினார். (3) அவர் நியாயமுள்ளவராக இருக்கின்றார்; அவர், "பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள"வராக இருந்தார். முதல் அதிகாரத்தில், "பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது" என்றிருந்தது (1:15அ). துன்மார்க்கர் தப்பிக்க இயலாதபடி இயேசுவின் தண்டனை இருக்கும் என்பதை இது குறிக்கிறது. இக்கடிதத்தின் பிற்பகுதியில் இயேசு, தேவபக்தியற்றவர்களை "மிகுந்த உபத்திரவத்திலே தள்ள"ப் போவதாகக் கூறினார் (2:22). மீண்டுமாக அவர், மனந்திரும்பாதவர்களை "கொல்லவே கொல்லுவேன்" என்று எச்சரித்தார் (2:23).*

## *பாராட்டுரை (2:19)*

*இயேசுவின் பயங்கரத்திற்குரிய பண்பினங்கள் அவசியமாய் இருந்தது ஏன் என்பதை அவர் விளக்குவதற்கு முன்பு, அவர் அந்த சபைக்குழுமத்தில் தாம் கண்டிருந்த நேர்மறையான குணங்களைப் பட்டியல் இட்டார்: "உன் கிரியைகளையும், உன் அன்பையும்,[10] உன் ஊழியத்தையும், உன் விசுவாசத் தையும், உன் பொறுமையையும்,[11] நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" (வசனம் 19). வேறு எந்த சபையைக்காட்டிலும் அதிகமாகப் பாராட்டுவதற்குரிய விஷயங்களை இயேசு தியத்தீராவில் கண்டார்.*

#### சபையானது மனதை ஈர்க்கக்கூடியதாக இருந்தது

*இது ஒரு ஊழியம் செய்யும் சபையாக இருந்தது. இயேசு, "உன் கிரியைகளை ... அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். இது சகோதரத்துவ*

வெளியீட்டிற்குப் பின்வருமாறு அறிக்கை அனுப்பிய சபையைப்போல் இருக்கவில்லை: ''கடந்த ஆண்டில் எவரொருவரும் ஞானஸ்நானம் பெறவில்லை, எவரொருவரும் ஐக்கியத்திற்கு மீளக்கட்டுவிக்கப்பட வில்லை, எவரொருவரும் எங்களிடம் உறுப்பினராகவில்லை. நாங்கள் முடிவுவரையிலும் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும்படி ஜெபியுங்கள்.''[12] தியத்தீராவில் இருந்த சபையானது இயங்குகின்ற, உயிருள்ள, செயல் துடிப்புள்ள சபையாக இருந்தது.

இது ஒரு அன்புகூரும் சபையாக இருந்தது. இயேசு, "உன் அன்பை ... அறிந்திருக்கின்றேன்'' என்று கூறினார். நாம், ''சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிரு(க்க)'' வேண்டியுள்ளது (ரோமர் 12:10அ). கடிதம் எழுதப்பட்ட ஏழு சபைகளில், இது ஒன்று மாத்திரமே தனது அன்புக்காகப் பாராட்டப்பட்ட சபையாக இருந்தது என்ற உண்மையில் ஒருவேளை, தனிச்சிறப்புக்கள் சில இருக்கலாம்.

இது ஒரு உதவி செய்கின்ற சபையாக இருந்தது. இயேசு ''உன் ஊழியத்தை ... அறிந்திருக்கிறேன்'' என்று கூறினார். இந்த சபையின் அன்பு நடைமுறைக்குரியதாக இருந்தது; இதன் உறுப்பினர்கள், பிறருக்கு உதவி செய்யும் வழிகளைக் கண்டறிந்திருந்தனர்.

இது ஒரு நம்பிக்கைக்கு உரிய சபையாக இருந்தது. இயேசு, "உன் விசுவாசத்தை ... அறிந்திருக்கிறேன்'' என்று கூறினார். இவர்கள் தங்கள் சொந்த பலத்தைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, கர்த்தரைச் சார்ந்து இருக்கக் கற்றிருந்தனர்.

இது ஒரு உறுதியாய் நிலைத்திருக்கும் சபையாக இருந்தது. இயேசு, ''உன் பொறுமையை ... அறிந்திருக்கிறேன்'' என்று கூறினார். இது தேவபக்தியற்ற ஒரு சமூகத்தினால் சூழப்பட்டிருந்ததால் ஊக்கம் இழந்து போயிருக்க வேண்டும், ஆனால் இந்தக் கிறிஸ்தவர்கள் (விசுவாசத்தை) விட்டுக் கொடுத்து விடவில்லை.

**சபையானது முன்னேறிக்கொண்டிருந்தது**

இது நற்கிரியைகளில் பெருகிக்கொண்டிருந்த ஒரு சபையாக இருந்தது என்பது இயேசுவின் மிகக்குறிப்பிடத்தக்க பாராட்டாக இருந்தது: அவர், "நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக் கிறதையும் அறிந்திருக்கிறேன்!'' என்று கூறினார். காலம் செல்லுகிறபோது உற்சாகத்தை இழத்தலும், அதிகம் கிரியை செய்வதற்குப் பதிலாகக் குறைவாகக் கிரியை செய்தலும் இயல்பாக உள்ளது, ஆனால் தியத்தீராவில் இருந்த சபையானது, ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கென்று அதிகமாய்க் கிரியை செய்துகொண்டிருந்தது. இந்த அம்சத்தில், இந்த சபையானது மற்ற பல சபைகளுக்கு - விசேஷமாக, சர்தையில் இருந்த சபைக்கு (3:1) - நேர் எதிரானதாக இருந்தது. ஜேம்ஸ் M. டோல் அவர்கள் கூறியபடி, "முன்னோக்கிச் செல்லுதல் என்பது மாத்திரமே சபையின் பாதுகாப்பாக உள்ளது.''[13]

## கண்டனம்
## *(2:20-23)*

*எல்லா சபைக்குழுமங்களையும் போலவே, தியத்தீராவில் இருந்த சபையும் தனது பலங்களை மாத்திரமல்ல, ஆனால் தனது பலவீனங்களையும் கொண்டிருந்தது. இதன் ஒழுக்க நெறிகளை இயேசு பாராட்டியிருந்தார்; இப்போது அவர் இதன் குற்றங்களைக் கண்டனம் பண்ணினார்: "ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறைஉண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசி யென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவை களைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்[14]" (வ. 20).*

**கண்டனம் பண்ணப்பட்ட "தீர்க்கதரிசினி"**

*தியத்தீரா சபை பெண்கள்ளப்போதகி ஒருத்தியைக் கொண்டிருந்தது என்பது தெளிவு.[15] அவளது பெயர் உண்மையாகவே யேசபேல் என்று இருந்தது என்பது சாத்தியமற்றதாக உள்ளது; அந்தப்பெயரை நாம் இன்றைய நாட்களில் நமது மகள்களுக்கு இடாதிருப்பதற்கான அதே காரணத்திற்காகவே அவளது பெற்றோர்களும் இந்தப் பெயரை அவளுக்கு வைத்திருக்க மாட்டார்கள். அவள், பழைய ஏற்பாட்டின் புகழ்ச்சியற்ற யேசபேலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிய காரணத்தால் அவளை யேசபேல் என்று இயேசு அழைத்திருக்கலாம்.*

*யேசபேல் என்பவள், இஸ்ரவேல் அரசரான ஆகாப் என்பவரைத் திருமணம் செய்து கொண்டிருந்த புறதெய்வ வணக்கம் செய்யும் ஒரு அரசியாய் இருந்தாள், அவள் அவரை விக்கிரக ஆராதனைக்குள் மிக ஆழமாக வழிநடத்திச் சென்றாள்.[16] அவள் ஆகாப் அரசரை, சமாரியாவில் பாகாலுக்கு ஒரு கோவிலைக் கட்டும்படியும், தங்கள் சொந்த உணவு மேஜையில் ஆஷெராவின்[17] தீர்க்கதரிசிகள் நானூறு பேருக்கு உணவளிக்கும் படியும் இணங்கச் செய்தாள். யேசபேலைப் பற்றி நான் நினைக்கும்போது, அழகிய, கவர்ச்சியான மற்றும் மோசம்போக்கும் - அத்துடன் கூடுதலாக தந்திரமும், ஏமாற்றும், ஒழுக்க உணர்வு இல்லாத தன்மையும் கொண்ட - ஒரு பெண்ணாக நினைக்கின்றேன்.*

*தியத்தீராவில் இருந்த யேசபேல் இதேபோன்ற குணங்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவள் தன்னைத் தீர்க்கதரிசினியென்று உரிமைகோரிக்கொண்ட பேராவலும், தவறான எண்ணத்தைத் தூண்டு தலும் உடைய பெண்ணாக இருந்தாள் என்பது தெளிவு. சபையின் தொடக்க நாட்களில், தீர்க்கதரிசனம் என்பது அற்புத வரங்களில் ஒன்றாக இருந்தது (1 கொரிந்தியர் 12:10).[18] இந்த வரம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது (நடபடிகள் 2:17; 1 கொரிந்தியர் 11:5). இந்த வரத்தைப் பெண்கள், சபையின் பொதுவான கூடுதல்களில் பயன்படுத்தக் கூடாதிருந்தது (1 கொரிந்தியர் 14:34),[19] ஆனால் அவர்கள் அதைக் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின்கீழ் பயன்படுத்த முடிந்திருந்தது*

*(1 கொரிந்தியர் 11:5).* இருப்பினும், இந்தப் பெண் உண்மையிலேயே தீர்க்கதரிசன வரத்தைக் கொண்டிருந்தாள் என்று இயேசு கூறவில்லை; மாறாக, இவள் தன்னைத் தீர்க்கதரிசினியென்று அழைத்துக் கொண்டாள். இன்றைய நாளில் இவளை நாம், "தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொள்பவள்" என்று குறிப்பிடுவோம்.

உணரா அறிவினர்[20] போல், இந்தப் பொய்த்தீர்க்கதரிசினியும் தனக்கு, "ஆழமான விஷயங்களை"ச் சென்றடையும் வழி இருந்தது என்றும், அவள் மூலமாக மாத்திரமே ஆழமான உட்கண்ணோட்டம் கிடைக்கும் என்றும் உரிமைகோரினாள். இவளது போதனைகளை "சாத்தானின் ஆழங்கள்" *(2:24)* என்று இயேசு அடையாளமிட்டார்.[21] இவள் உலகத்துடன் கிறிஸ்தவர்களுக்கு உள்ள தொடர்பு பற்றிப் பிறருக்கு அறிவிக்கப்படாத சில வெளிப்படுத்துதல்கள் தனக்கு உண்டு என்று உரிமைகோரினாள் என்பதாகக் காணப்படுகிறது. இவளது செய்தியின் மையக்கருத்து என்ன என்பது கற்பனை செய்வதற்கு கடினமானதாக இருப்பதில்லை: "நீங்கள் உங்கள் குடும்பத்திற்குத் தேவையானவற்றைச் சம்பாதிக்கும்படி குழுக்களில் ஏதாவதொன்றில் அங்கம் வகிக்கவேண்டியது அவசியம் என்று தேவன் என்னிடம் கூறியுள்ளார். உண்மையில் அவர், நீங்கள் உங்கள் தொழிலில் வெற்றியுள்ளவர்களாய் இருக்க விரும்புவதாக என்னிடம் கூறியுள்ளார் - அதன்மூலம் நீங்கள் அவரது உண்மையான தீர்க்கதரிசினிக்கு அதிகமாய்க் கொடுக்க முடியும்!"

இவள், தேவனுக்கு எதிரான தனது கொள்கையை ஒரு இல்ல அமைவில் (வசதியான வகையில்) பரப்பியிருக்க வேண்டும். ஒருவேளை இவள் செல்வமிக்க ஒரு பெண்ணாகவும், தனது அரண்மனை போன்ற வீட்டிற்குத் தன்னைப் பின்பற்றக்கூடியவர்களை அழைக்கும் செல்வாக்குக் கொண்ட வளாகவும் இருந்திருக்கலாம். ஒருவேளை அவள் வீடு வீடாகச் சென்று, தன் பேச்சைக் கேட்கும் புதியவர்களைத் தேடியிருக்கலாம். அவளது செய்முறை எப்படியிருந்தாலும், அவள் பரப்பிய உபதேசமானது கிறிஸ்தவர்கள் "வேசித்தனம்பண்ணவும்;[22] விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும்" காரணமாயிற்று (வசனம் 20ஆ). பாலாமியர்கள் மற்றும் நிகொலாய் மதஸ்தர் ஆகியோரின் போதனையும் இதே விளைவை ஏற்படுத்தி இருந்தபடியால் *(2:14, 15)*, இது அனேகமாக மாறுபட்ட பெயர்ப்பட்டியுடன் வந்ததான, சாத்தானின் அதே உற்பத்திப் பொருளாகவே இருந்திருக்கலாம்.

பலர் கேட்க விரும்புவதை யேசபேல் கூறியதால், அவள் வெற்றிகர மானவளாக இருந்தாள். சிலர் "ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" என்பது எக்காலத்திலும் உண்மையாகவே இருந்துள்ளது *(2 தீமோத்தேயு 4:3, 4).*

**சமரசம் செய்யும் மக்கள்**

யேசபேல் மற்றும் அவளைப் பின்பற்றுபவர்கள் ஆகியோர்மீது இயேசு மகிழ்ச்சியற்று மாத்திரம் இருக்கவில்லை. மேலும் அவர், இவளது மோசம் போக்கும் செயல்களைத் தொடர அனுமதித்த சபையின்மீதும் குறிப்பாக மகிழ்ச்சியற்று இருந்தார்: "ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறைஉண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் ... அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்'' (வசனம் 20). பவுல், ''கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டிருந்தார் (எபேசியர் 5:11). கிறிஸ்தவர்கள், "சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது ... இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது" என்று கூறியிருந்தார் (1 கொரிந்தியர் 5:11).

தியத்தீராவில் இருந்த சபையானது, யேசபேலிடமிருந்தும் அவளைப் பின்பற்றியவர்களிடமிருந்தும் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளாது இருந்தது ஏன்? அந்த யேசபேல், சபை நடத்துநர்களில் ஒருவருடைய மனைவியாய் இருந்தாள் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[23] பழங்கால கையெழுத்துப்பிரதிகள் சிலவற்றின் வசனம் 20ல், "உன் மனைவி"[24] என்று கூறுவதற்குக் கிரேக்க வசனத்தின் வழக்கமான வழிமுறையாகிய "உன் பெண்" என்றுள்ளது. இந்த யேசபேல் என்பவள் அங்கிருந்த பிரசங்கியாரின் அல்லது மூப்பர்களில் ஒருவரின் மனைவியாக இருந்திருக்கலாம். குறைந்தபட்சம், இவள் தன்னை எதிர்த்து நின்றவர்களுக்கு இடர்ப் பாட்டை விளைவிக்கக் காரணமாகக் கூடிய அளவுக்குச் செல்வாக்கு உடைய பெண்ணாக இருந்தாள்.

கொரிந்து நகரத்தில் நடந்தது போலவே, இந்த சபைக்குழுமமும் தனது நியாயந்தீர்க்காத ஆவியைக் குறித்துச் செருக்குடன் இருந்திருக்கவும் சாத்தியம் உள்ளது (1 கொரிந்தியர் 5:1, 2ஐக் காணவும்). முன்னரே குறிப்பிட்டபடி, இந்த சபைக்குழுமம் ஒன்று மாத்திரமே தனது அன்பிற்காகப் பாராட்டப் பட்டிருந்தது. ஒருவேளை, இதன் உறுப்பினர்கள் சிலருக்குள், அன்பு என்பது "சபைக்குள் கலகத்திற்குக் காரணமாகி விடுமோ என்ற பயத்துடன் பாவத்தை யுக்தியாக மன்னித்துவிடும் இனிய மன உணர்வாக" மாறியிருந்தது.[25] தவறைச் சகித்துக்கொள்வதற்கு அவர்களின் காரணங்கள் எவையாக இருந்தாலும், அந்தக் காரணங்கள் இயேசுவினால் ஏற்றுக் கொள்ளப்பட இயலாதவைகளாய் இருந்தன. "யேசபேலைக் குறித்து நடவடிக்கை எடுத்தல் என்பது சபையின் அத்தியாவசியமான பணியாக இருந்தது" என்பதை தியத்தீராவில் இருந்த கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்.[26]

## *எச்சரிக்கையும் அச்சுறுத்தலும்*
## *(2:21-25)*

**உண்மையற்றவர்கள் எதிர்பார்க்கக் கூடியது என்ன**

*கடிதத்தில் அடுத்த கூற்று ஏறக்குறைய அதிர்ச்சியானதாக வருகிறது: இயேசு, "அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்" என்று கூறினார் (வசனம் 21அ). தேவனுடைய நீடிய பொறுமைக்கு ஆதாரம் எதுவும் உங்களுக்குத் தேவைப்பட்டால், அது இங்குள்ளது. தேவபக்தியற்ற இந்தப் பெண், மனந்திரும்புவதற்கும் தனது வழிகளை மாற்றிக்கொள்வதற்கும் இயேசு ஒவ்வொரு வாய்ப்பையும் கொடுத்திருந்தார்! (2 பேதுரு 3:9ஐக் காணவும்.) துரதிர்ஷ்டவசமாக, கர்த்தர் மக்களுக்கு மனந்திரும்புவதற்குக் காலத்தைக் கொடுக்கும்போது, பாவத்தைக் குறித்துக் கர்த்தர் அக்கறை கொள்வது இல்லை/கவலைப்படுவது இல்லை என்பதற்கு இது நிரூபணமாக உள்ளது என்று சிலர் விளக்கம் தருகின்றனர். யேசபேல் மாற்றம் அடைவதற்கான வாய்ப்பு அவளுக்குத் தரப்பட்டிருந்தாலும், "தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை" என்று இயேசு கூறினார் (வசனம் 21ஆ).* RSV *யில்,* "she refuses to repent" *("அவள் மனந்திரும்ப மறுக்கின்றாள்") என்றுள்ளது.*

*சபை, அவளது அராஜகத்தைச் சகித்திருந்தது, ஆனால் இயேசு அவ்வாறு இருக்க மாட்டார். அவர், "இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி,[27] அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள்[28] தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால்[29] அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி" (வசனம் 22) என்று வாக்குத்தத்தம் அளித்தார். இந்த எச்சரிக்கையில் இயேசு, வார்த்தை விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தினார்: யேசபேல் எனப்பட்டவள், கிறிஸ்தவர்களை வேசித்தனப் படுக்கையில் வசப்படுத்தியிருந்தாள்; இயேசு, அவளையும் அவளைப் பின்பற்றுபவர்களையும் உபத்திரவத்தின் படுக்கையில் தள்ளுவார். இருப்பினும், மனந்திரும்பாவிட்டால் என்ற தகுதி வழக்குக் கூற்றைக் கவனியுங்கள். நமது கிருபை யுள்ள கர்த்தர் அந்த அளிப்பை எப்போதுமே கூட்டுகின்றார்.*

*தொடர்ந்து இயேசு, "அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்" என்றார் (வசனம் 23அ). "பிள்ளைகள்" என்பது யேசபேலின் போதனையை[30] அரவணைத்துக்கொண்டிருந்த, அவளது ஆவிக்குரிய வழித்தோன்றல்களைக்[31] குறிப்பிட்டது. மூலவசனத்தில்* "I will kill her children with death" *என்று இயேசு சொல்லர்த்தத்தில் கூறினார் ("அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்") என்பது "குறிப்பிட்ட ஒரு பயங்கரமான மரணத்தினால் கொல்லுதல்!" என்று அர்த்தப்படும் எபிரெயப் பேச்சு உருவகமாகும்.[32]*

*மனந்திரும்பாதவர்களை இயேசு தண்டித்தல் என்பது அவரது மக்களுக்கு ஒரு பொருளறி பாடமாக இருக்கும் என்பது அந்தத் தண்டனை யின் ஒரு நோக்கமாக இருந்தது: "அப்பொழுது நானே உள்ளிந்திரியங்*

களையும்[33] இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்" (வசனம் 23ஆ). இருதயங்களை அறிகிற மகத்தானவராக மனந்திரும்பியிருந்தது யார், மனந்திரும்பியிராது இருந்தது யார் என்பதை அவர் அறிவார். இவ்விதமாக, ஒவ்வொருவரும் தாம் பெறத் தகுதியானவற்றை மிகச்சரியாகப் பெறுவார்கள்: "அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்'' (வசனம் 23இ).[34]

**உண்மையுள்ளவர்கள் செய்யவேண்டியது என்ன**

வசனம் 24ல், கடிதத்தின் தொனியானது முரட்டுத்தனத்திலிருந்து திடீரென்று மென்மையாக மாறுகிறது.[35] மனந்திரும்பாதவர்களுக்குக் காத்திருந்த தண்டனையைப் பற்றிக் கூறியபின்பு, இயேசு பின்வருவன வற்றைத் துரிதமாய்க் கூட்டினார்:

> தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது, உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன். உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள் (வசனங்கள் 24, 25).

யேசபேலிடமிருந்தும் அவளது ஆதரவாளர்களிடமிருந்தும் ஐக்கியத்தை விலக்கத் தவறியதற்கு, சபைக்குழுமத்தில் இருந்த சிலரை இயேசு பொறுப்பாளிகளாக்கினார் என்பதை வசனம் 20 காண்பிக்கிறது, ஆனால் வசனம் 24, மற்றவர்கள் அதற்குப் பொறுப்பைக் கொண்டிருப் பதில்லை என்ற மனப்பதிவை விட்டுச் செல்கிறது. முதல் குழுவின் அடிப்படை ஊக்குவிப்பாளர்கள் சபையின் நடத்துநர்களாய் இருந்திருப் பார்கள், இவர்கள் சபை ஒழுங்கு நடவடிக்கைக்கென்று எந்த முன்முயற்சி யும் செய்யாது இருந்திருக்கலாம். எபேசுவில் இருந்த சபையானது பல ஆண்டுகளாக மூப்பர்களைக் கொண்டிருந்தது (நடபடிகள் 20:17, 28); தியத்தீராவில் இருந்த சபையும் மூப்பர்களைக் கொண்டிருந்து இருக்கலாம் (நடபடிகள் 14:23) மூப்பர்கள், "மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கை யாயிரு(த்தல்)" என்பது அவர்களின் பொறுப்பாக இருந்தது (நடபடிகள் 20:28அ). மூப்பர்களின் குழு ஒன்றுக்குப் பவுல், "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவை களைப் போதிப்பார்களென்று" எச்சரித்திருந்தார் (நடபடிகள் 20:30). அவர், ''ஆனபடியால், … நினைத்து விழித்திருங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்திருந்தார் (நடபடிகள் 20:31). தியத்தீரா சபையில் இருந்த நடத்துநர்கள் யாராயிருப்பினும், அந்த மனிதர்கள் தங்கள் பொறுப்பில் தவறியிருந்தனர்.[36]

விஷயம் இப்படியிருந்தால், பின்பு - இயேசு பொறுப்பைச் சுமத்தாதிருந்த - இரண்டாவது குழுவைச் சேர்ந்தவர்கள் யார்? அவர்கள் யேசபேலின் கும்பலைச் சேர்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட அச்சுறுத்

தலை உணர்ந்தறிந்தும், தனி நபர்கள் என்ற வகையில் அதைப் பற்றி எதுவும் செய்வதற்கான அதிகாரத்தில் குறைவுபட்டிருந்த, உண்மை நிறைந்த உறுப்பினர்களாய் இருந்தனர் என்று நான் நம்புகின்றேன். இவர்களுக்கு இயேசு, ''உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன். உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்'' என்று கூறினார் (வசனங்கள் 24இ, 25). இங்கு குறிப்பிடப்பட்ட "பாரம்" என்பது பொறுப்புகளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.[37] சந்தர்ப்பப் பொருளில் இயேசுவின் கூற்று, "இந்த விஷயத்தைத் தீர்த்துவைக்கும் சுமையை நான் உங்கள் தோள்களின்மீது சுமத்தமாட்டேன்; உங்களால் முடிந்தவற்றை நீங்கள் செய்திருக்கின்றீர்கள். நான் உங்களுக்குக் கொடுத்துள்ள ஆசீர்வாதங் களைப் பற்றிக்கொண்டு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருத்தலே இப்போது உங்கள் பொறுப்பாக உள்ளது'' என்று அர்த்தப்படுவதாகக் காணப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, கான்சாஸில் இருந்த எனது நண்பரிட மிருந்து நான் ஒரு கடிதத்தைப் பெற்றேன். சபைக்குழுமத்தில் இருந்த ஒரு சகோதரர், அவரது வாழ்வுப்பாணியினிமித்தம் கடிந்து கொள்ளப்பட வேண்டியவராயிருந்ததாலும், ஒருவேளை அவரை ஐக்கியத்தை விட்டே நீக்கி வைக்கப்பட வேண்டும் என்பதாலும் இந்த சகோதரர் கலக்கம் அடைந்திருந்தார். இவர் மூப்பர்களிடத்தில் பலமுறை பேசியிருந்தார், அவர்கள் இதைப் பற்றி ஒன்றும் செய்திருக்கவில்லை. எனது நண்பர், தாம் என்ன செய்ய வேண்டும் என்று அறிய விரும்பினார். அவர் அந்த சபைக்குழுமத்தை விட்டு வேறொரு சபைக்குழுமத்திற்குச் சென்றுவிட வேண்டுமா என்று வியப்படைந்தார். தேவனுடைய அருளிரக்கத்தினால், முந்தின ஞாயிறு அன்று நான் தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றிப் பிரசங்கித்திருந்தேன், அதன் பொருளடக்கங்கள் என் மனதில் புத்தம் புதியவைகளாக இருந்தன.

எனது நண்பர் தமது கடிதத்தில், தாம் மூப்பர்களிடம் சென்றிருந் ததோடு, குற்றம் செய்யும் அந்த சகோதரரிடத்திலும் சென்று, "அவரது வழியின் தவறை" காண்பிக்கவும் அவரது "ஆத்துமாவை மரணத்தில் இருந்து மீட்கவும்" (யாக்கோபு 5:20) முயற்சி செய்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்விதமாக, நான் எனது பதிலில், இந்த விஷயத்தில் அவர் தம்மைக் குற்றமற்றவராய்க் காத்துக்கொள்வதற்குத் தம்மால் முடிந்த எல்லா வற்றையும் அவர் செய்திருந்தார் என்பது உறுதி என்று கூறினேன் (எசேக்கியல் 3:19). மூப்பர்கள் தங்களுடைய பொறுப்பில் தவறியிருந்தால், அவரல்ல, அவர்களே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபிரேயர் 13:17) என்பதை நான் வலியுறுத்தினேன்.

பின்பு நான் என் நண்பருக்கு, தியத்தீராவில் "உண்மையாய் நிலைத் திருந்த ஒருசிலருக்கு" இயேசு கொடுத்த அறிவுறுத்தல்களைக் குறிப்பிட் டேன். அவர்களைச் சபைக்குழுமத்தில் இருந்து சென்றுவிடும்படி[38] அறிவுரை கூறுவதற்குப் பதிலாக இயேசு அவர்களுக்கு, ''உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்த மாட்டேன். உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்'' என்று அறிவுறுத்தினார் (வசனங்கள்

24, 25). எனது நண்பரிடத்தில் நான், "இந்த வேளையில் நீங்கள், மற்றவர்கள் செய்ய வேண்டியவற்றைக் கொண்டு உங்களையே பாரப்படுத்திக் கொண்டுள்ளீர்கள், அந்த சுமையை நீங்கள் கொண்டிருக்கும்படி கர்த்தர் உங்களிடத்தில் விரும்புகிறதில்லை. அதைத் தூக்கியெறிந்து விடுங்கள், உங்கள் பொறுப்புகளின் மீது மாத்திரம் கவனம் செலுத்துங்கள். அவர் வருமளவும் உங்களுக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருங்கள்'' என்று கூறினேன்.

## வாக்குத்தத்தம் (2:26-28)

எனது நண்பருக்கு நான் கொடுத்த அறிவுரை சுலபமானதாக இருக்கவில்லை, தியத்தீராவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் அறைகூவல் சுலபமாய் இருந்ததில்லை என்பதில் நான் நிச்சயமாய் இருக்கின்றேன். தேவபக்தியற்ற உலகத்தார், உண்மையற்ற உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பற்ற நடத்துநர்கள் ஆகியோரால் சூழப்பட்டிருத்தல் என்பது ஊக்கத்தைக் குலைக்கிறதாக உள்ளது. இந்தக் காரணத்தினால் இயேசு, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பதாகத் தங்களைக் காண்கின்றவர்களை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களுக்கு விசேஷித்த வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார்:

> ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக்[39] கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான், அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் (வசனங்கள் 26-28).

முதலாவதாக இயேசு அவர்களுக்கு அதிகாரத்தை வாக்குத்தத்தம் செய்தார். இருப்புக்கோலால் ஆளுகை செய்தல் என்ற குறிப்பு சங்கீதம் 2ல் இருந்து வந்துள்ளது, அது இயேசுவின் அதிகாரத்தைப்[40] பற்றிப் பேசுகிற மேசியாத்துவ சங்கீதமாக உள்ளது. இயேசுவின் கிரியைகளை (அதாவது, அவருக்குக் கீழ்ப்படிதலைப்) பற்றிக்கொண்டுள்ளவர்கள் அவரது ஆளுகையில் பங்கடைவார்கள், கடைசியில், துன்மார்க்கத்தின் மீதான அவரது வெற்றியிலும் பங்கடைவார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்தார். தனிச்சிறப்பற்ற ஒரு நகரத்தில் இருந்த மறைவான இந்த சபைக்கு, இது ஒளிர்வுமிக்க எதிர்பார்ப்பாக இருந்தது.

பின்பு இயேசு, நம்பிக்கையை வெளிக்காண்பித்தார். "விடிவெள்ளி நட்சத்திரம்'' என்பது விடிகாலை வருவதற்குச் சற்று முன்னதாக, தொலைவானத்தில் தோன்றுகிற பிரகாசமான ஒரு "நட்சத்திரமாக''[41] உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் இயேசு தம்மை "பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்'' என்று அடையாளப் படுத்தினார் (22:16), எனவே அவர் அனேகமாக, உண்மையுள்ளவர்களுடனான ஒரு விசேஷித்த உறவுமுறை பற்றி இவ்விடத்தில்

பேசியிருக்கலாம். தியத்தீராவில் இருந்த கிறிஸ்தவர்கள் முன்னோக்கி எதிர்பார்த்திருக்கக் கூடிய சில விஷயங்களை அவர்களுக்குக் கொடுக்க இயேசு விரும்பினார். விடிவெள்ளி நட்சத்திரம் என்பது ஒரு புதிய நாளுக்கு முன்னோடியாக இருப்பது போல், நம்பிக்கையற்ற இருள்சூழ்ந்த இரவானது விரைவில் முடிந்துபோகும், அவர்களின் வாழ்வு என்ற தொலைவானத்தில் நம்பிக்கையினால் நிறையப்பெற்ற ஒரு புதிய நாள் விரைவில் உதயமாகும்.

## புத்திகூறுதல் *(2:29)*

இயேசு மீண்டுமாக, *"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்"* என்ற புத்திகூறுதலை உள்ளடக்கினார் *(வசனம் 29)*. இந்தப் புத்திகூறுதல் முதன் முறையாக, கடிதத்தின் முடிவில் வந்துள்ளது என்பதைக் கவனியுங்கள். எஞ்சியுள்ள மூன்று கடிதங்களுக்கும் இதுவே வடிவமைப்பாக இருக்கும்.

## முடிவுரை

இந்தப் பழங்காலக் கடிதத்தில் பல சத்தியங்கள் "நடைமுறைப்படுத்தும் ஆவலுள்ள கரங்களுடன் நம்மிடம் நூற்றாண்டுகளைக் கடந்து வந்து சேர்கின்றன."[42] அவற்றில் நான்கின் மீது நாம் நமது கவனத்தைத் திருப்புவோம்.

*(1) நாம் இன்னமும் உலகத்துடன் போராட்டத்தைக் கொண்டுள்ளோம்; நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது.* கிறிஸ்தவர்களின் ஒவ்வொரு புதிய சபைக்குழுமமும், தியத்தீரா சபையினால் எதிர்கொள்ளப் பட்டிருந்த அறைகூவலை எதிர்கொண்டாக வேண்டும்: "உலகத்திலிருத்தல்" *(யோவான் 17:11)*, ஆனால் "உலகத்தாரல்லாதிருத்தல்" *(யோவான் 17:16)*.

*(2) நாம் இன்னமும், தவறைக் கவர்ச்சியானதாக்கக்கூடிய செல்வாக்குள்ள மக்களைக் கொண்டுள்ளோம்; நாம் தவறாக வழிநடத்தப் பட்டுவிடக் கூடாது.* யேசபேலின் பிள்ளைகள் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டு சுகித்திருக்கின்றனர். "கவர்ச்சியான, வெற்றிநிறைந்த, திறமையான மக்கள், புத்திக்கூர்மை அல்லது ஒழுக்கம் என்பவற்றில் தவறாதவர்களாக இருப்பார்கள் என்பது அவசியமல்ல" என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.[43] வசனத்தின் தெளிவான போதனையினால் யாவரும் சோதிக்கப்படவேண்டும் *(1 யோவான் 4:1)*.

*(3) நாம் இன்னமும் நமது அறைகூவல்களைச் சந்திப்பதில் கர்த்தருடைய உதவியைக் கொண்டுள்ளோம்; நாம் மனக்கலக்கம் அடையக் கூடாது.* ஏழு கடிதங்களிலும் உள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் "ஜெயங்கொள்ளுகிற" ஒருவரைப் பற்றிப் பேசுகிறது. இந்தக் கடிதத்தில் இயேசு, விளக்கமான ஒரு சொற்றொடரைக் கூடுதலாகத் தந்தார்: "முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ" *(வசனம் 26ஆ)*. நீங்கள் "ஜெயங்கொள்ளுகிறவராய்" இருக்க வேண்டும் என்றால், உங்கள் வாழ்வை இயேசுவுக்கு ஒப்புவித்து, விளைவுகள் எதுவாக

இருந்தாலும் அவரது சித்தத்தைச் செய்யத் தீர்மானிக்க வேண்டும்.[44] நீங்கள் இயேசுவுக்கு உங்களை ஒப்புவித்தால், அவர் உங்கள் வாழ்வில் வரும் எந்தப் பிரச்சனையையும் வெற்றிகொள்ள உங்களுக்கு உதவுவார்.

*(4) நாம் இன்னமும் தவறானவர்களாய் இருக்கக் கூடும்; நாம் பிடிவாதம் உள்ளவர்களாய் இருக்கக்கூடாது.* உலகத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போதனை மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றினால் நீங்கள் குற்றப்பட்டு இருக்கின்றீர்களா? இந்தப் பாடம், மனந்திரும்பும்படி உங்களை ஊக்கப்படுத்துவதற்கான கர்த்தருடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். இந்தச் செய்தியை உங்கள் இருதயத்திற்கு நடைமுறைப் படுத்துங்கள், கிருபையுள்ள ஒரு எஜமானரால் வழங்கப்படுகிற வாய்ப்பை இகழ்ந்து தள்ளிவிடாதீர்கள். கடைசியில் கர்த்தர் உங்களை சபிப்பதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கும்படி இன்றைய தினமே உங்கள் வாழ்வை மாற்றுங்கள்!

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தின் மீதான பெரும்பான்மை யான பிரசங்கங்களின் தலைப்புகள், ''யேசபேல்'' என்ற பெயரைக் கொண்டுள்ளன: "யேசபேலின் இல்லம்" அல்லது "யேசபேல் சந்திப்பு." இதற்குப் பதிலாக, கடைசி வாக்குத்தத்தத்தின்மீது கவனம் செலுத்திய ரே சம்மர்ஸ் அவர்கள் இந்தப் பகுதியை "நட்சத்திரத்திற்காகக் காத்திருங்கள்" என்று பெயரிட்டார். கிறிஸ்தவர், ''இருளிலும் பல கலக்கங்களிலும் அடிக்கடி நடக்கலாம், ஆனால் அவரை வழிநடத்துவதற்கு விடிவெள்ளி நட்சத்திரமானது அவருக்கு அளிக்கப்படும்; அவர் [தவறான நடத்து வத்துவத்தை] பின்பற்ற மறுத்து நட்சத்திரத்திற்காகக் காத்திருக்க வேண்டும்.''[45] "சோதிக்கப்பட்ட சபை" மற்றும் "சமரசத்தின் பேரழிவு" என்பவை சாத்தியக்கூறுள்ள மற்ற தலைப்புகளில் உள்ளடங்குகின்றன.

குறிப்புகள்

[1]இந்தப் புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும் என்ற வரைபடத்தைக் காணவும். [2]Quoted in Robert H. Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 101. [3]உடைந்துபோன இந்தக் கற்கள் இன்றைய நாட்களில் உள்ள அகிஸார் என்ற கிராமத்தின் மத்தியில் ஏராளமாகக் கிடக்கின்றன. [4]James M. Tolle, *The Seven Churches of Asia* (Pasadena, Tex.: Haun Publishing Co., 1968), 50. [5]சில அம்சங்களில், இந்தக் குழுக்கள் மிக பலம் வாய்ந்த உழைப்பாளர் ஒன்றியங்களுடன் ஒப்பிடப்பட முடிந்திருந்தன. [6]Alan Johnson, "Revelation," *The Expositor's Bible Commentary,* vol. 12 (Grand Rapids, Mich.: Zondervan Publishing House,

1981), 443. [7]இவ்விரு பாவங்களுமே தேவனால் கண்டனம் பண்ணப்பட்டன (படுகின்றன). இந்தப் புத்தகத்தில், 2:14க்கான குறிப்புகளைக் காணவும். [8]அச்சிடப்பட்ட வேதாகமப் பள்ளி மாணவர்களில் சிலர், புதிய ஏற்பாட்டுக்கு எதிராக உள்ள மதரீதியான அல்லது அரசியல் ரீதியான கருத்தமைவுகளின் செல்வாக்கைக் கொண்டுள்ள பகுதிகளில் வாழுகின்றனர். நீங்கள் அப்படிப்பட்ட பகுதியில் வாழ்பவராய் இருந்தால், வேலைவாய்ப்பு மீது கிறிஸ்தவர்களுக்கு எதிராக வைக்கப்படக்கூடிய எதிரான அழுத்தங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் - உங்கள்மீது நான் பரிவிரக்கம் கொள்கின்றேன், உங்களுக்காக ஜெபிக்கின்றேன். [9]வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே "தேவகுமாரன்" என்ற சொற்றொடர் காணப்படுகிறது. [10]KJV வேதாகமத்தில் "charity" என்றுள்ளது, ஆனால் மூலமொழி வசனத்தில் *agape* என்றுள்ளது, இது "அன்பு" என்பதற்குப் புதிய ஏற்பாட்டின் விசேஷித்த வார்த்தையாக உள்ளது.

[11]KJV வேதாகமத்தில் "patience" என்றுள்ளது, "patience" என்ற வார்த்தையானது KJV வேதாகமத்தில் வழக்கமாக "patient endurance" என்று அர்த்தப்படுகிறது. [12]இந்த அறிக்கையை அனுப்பிய சபைக்குழுமத்தின் உறுப்பினர்கள் தாங்கள் அறிந்திருந்த ஒவ்வொருவருக்கும் போதித்திருந்தும் பதில் செயல் கொண்டிராது இருந்திருக்கச் சாத்தியக்கூறுள்ளது - ஆனால் ஏசாயா 55:11 மற்றும் ரோமர் 10:17 ன் போதனையினுடைய வெளிச்சத்தில் இது பொருத்தமற்றதாக காணப்படுகிறது. [13]Tolle, 51. [14]KJV வேதாகமத்தில் "sufferest" என்றுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் "suffer" என்ற வார்த்தை "allow" என்று அர்த்தப்படக் கூடியதாக இருந்தது. சபையின் உறுப்பினர்கள், தீர்க்கதரிசினி என்னப்பட்ட இவள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவள் தனது கள்ள உபதேசத்தைப் பரப்புவதை அனுமதித்திருந்தனர். [15]"யேசபேல்" என்ற பெயர், போதிக்கப்பட்ட தவறுக்கு அல்லது சபையில் தவறைப் போதித்த பிரிவினருக்கு அடையாளமாக மாத்திரம் இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும், விஷயம் அப்படியிருந்திருந்தால், இயேசு பெர்கமுவுக்குப் பயன்படுத்தியது போல், "யேசபேலின் போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் சிலர் உன்னிடத்திலுண்டு" என்ற சொற்றொடரை இதைக்குறித்தும் பயன்படுத்தியிருக்கலாம் (2:14ஐக் காணவும்). [16]யேசபேலின் வரலாறு 1 மற்றும் 2 இராஜாக்களின் புத்தகங்களில் காணப்படுகிறது. விசேஷமாக, 1 இராஜாக்கள் 16; 18; 19; 21 ஆகிய அதிகாரங் களையும் 2 இராஜாக்கள் 9ம் அதிகாரத்தையும் காணவும். [17]ஆஷெரா என்பது பாகாலின் பெண் இணையாக இருந்தது. [18]இந்த அற்புத வரங்கள் தற்காலிகமானவைகளாகவும், புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்ட போது ஒழிந்துபோனவைகளாகவும் இருந்தன. [19]நாமகரணக்கூட்டத்தின் மதப்பள்ளியில் படித்த எனது நண்பர்களில் ஒருவர், அவருக்குப் போதித்த பேராசிரியர் ஒருவர், தொடக்க கால சபையில் பெண்பிரசங்கியார்கள் இருந்தனர் என்று "நிரூபிக்க" தியத்தீரா சபையில் இருந்த "யேசபேல்" என்பவளைப் பற்றிய விபரத்தைப் பயன்படுத்தியதாகக் கூறினார். யேசபேல் பொதுக்கூடுகைகளில் பிரசங்கித்தாள் என்ற குறிப்பு இல்லாதபடியினால், இது வினோதமான முடிவாக உள்ளது. மேலும் "யேசபேல்" என்பவளால் செய்யப்பட்ட எதுவும் கர்த்தருடைய அங்கீகாரத்தைப் பெற்றிருந்ததாகக் குறிப்பு எதுவும் இருப்பதில்லை. [20]இந்தப் புத்தகத்தில் "இருதயக் கோளாருடன் இருந்த சபை" என்ற பாடத்தில் உணரா அறிவினர் பற்றிய விளக்கத்தைக் காணவும்.

[21]ஏழு கடிதங்களிலும் இயேசு, "சாத்தானின் கூட்டம்" (2:9; 3:9), "சாத்தானின் சிங்காசனம்" (2:13), மற்றும் "சாத்தான் குடியிருக்கும் இடம்" (2:13) போன்ற சொற்றொடர்களைக் கொண்டு, உலகத்தில் தீமைக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார். "சாத்தானின் ஆழங்கள்" என்ற

சொற்றொடர் (''நான், நான் மாத்திரமே உங்கள் விரோதியை நீங்கள் உண்மையாகவே அறிவதற்கு உதவமுடியும்'') யேசபேலினால் பயன்படுத்தப்பட்டதென்று சிலர் நினைக்கின்றனர், ஆனால் இந்தச் சொற்றொடர் பெரும்பாலும், இயேசுவின் மதிப்பீடாக இருந்திருக்கவே சாத்தியக்கூறுள்ளது. [22]"Commit acts of immorality" என்ற சொற்றொடர், "to commit fornication" என்று நேரடியாக அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. (தமிழில் இது "வேசித்தனம் பண்ணுகிறதற்கு" என்றுள்ளது.) [23]இந்த நிலைப்பாடானது, வசனம் 18ல் உள்ள ''தூதன்'' (செய்தியாளர்) என்பது சபையின் நடத்துநர்களில் ஒருவராயிருந்தார் என்ற யூகத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது மற்றும் "உன் பெண்/மனைவி" என்பது ஆகவே அந்த நடத்துனரின் மனைவியைக் குறிக்கிறது. [24]மிகச்சிறந்த கையெழுத்துப் பிரதிகளில் இந்த வாசகம் இருப்பதில்லை. [25]Tolle, 52. [26]Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* (Nashville: 20th Century Christian Foundation, 1983), 38. [27]NASB வேதாகமத்தில் "of sickness" என்ற வார்த்தைகள் சாய்வெழுத்துக்களில் உள்ளன, இது இவ்வார்த்தைகள் மொழிபெயர்ப் பாளர்களால் கூட்டப்பட்டவை என்று குறிக்கின்றது. கிரேக்க மூலவசனத்தில் "a bed" என்று மாத்திரமே உள்ளது (KJV வேதாகமத்தில் காணவும்); ஆனால் இந்தச் சொற்றொடர், "மாபெரும் துன்பம்" என்ற சொற்றொடருக்கு இணையானதாக உள்ளதால், "துன்பத்தின் படுக்கை" என்பதன் ஏதோ ஒரு வகையே இங்கு அர்த்தப்படுகிறது. [28]வசனம் 20ல், ''வேசித்தனம் பண்ணுதல்'' என்பது உடல்ரீதியான பாலியல் பாவங்களைக் குறிக்கிறது, ஆனால் கல்வியாளர்களில் சிலர், வசனம் 22ன் "அவளோடே வேசித்தனம் பண்ணியவர்கள்" என்பது "புறதெய்வக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதன்மூலம் தேவனுக்கு உண்மையற்றுப் போவதில் அவளுடன் இணைந்து கொண்டவர்கள்'' - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஆவிக்குரிய வகையில் வேசித்தனம் பண்ணியவர்கள் - என்று அர்த்தப்படுத்துவதாக நினைக்கின்றனர். இது சிறிதளவே மாற்றம் ஏற்படுத்துகிறது. புறதெய்வ வழிபாட்டு நகரத்தில், ஆவிக்குரிய வேசித்தனம் என்பது பொதுவாக உடல்ரீதியான வேசித்தனத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. [29]''அவள் செய்கையிலிருந்து மனந்திரும்புதல்'' என்பதற்கு மாறாக, ''அவர்கள் செய்கையிலிருந்து'' என்பது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. அவர்கள் யேசபேலுடன் சென்றுகொண்டிருந்ததால், அவள் செய்த யாவற்றிற்கும் இயேசு அவர்களைப் பொறுப்பாளிகளாக்கினார். [30]"அவளது பிள்ளைகள்" (வசனம் 23) என்பது "அவளோடே வேசித்தனம் பண்ணினவர்கள்" என்பது பற்றிப் பேசுகிற இன்னொரு வழிமுறையாக மாத்திரம் உள்ளது (வசனம் 22). வேறுபாடு ஏதேனும் இருக்குமென்றால், அது அனேகமாக அளவு ஒன்றின்படியானதாகவே இருக்கும். சிலர், ''அவளுடைய பிள்ளைகள்'' என்பது யேசபேலினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டவர்களை மாத்திரமல்ல ஆனால் அவளது செய்தியைப் பரப்பியவர்களையும் குறித்தது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

[31]பவுல் சிலவேளைகளில், தம்மால் மனமாற்றப்பட்டவர்களைத் தமது பிள்ளைகள் என்று குறிப்பிட்டார் (எடுத்துக்காட்டாக, 1 கொரிந்தியர் 4:14; 1 தீமோத்தேயு 1:18). [32]யேசபேலைப் பின்பற்றியவர்களைக் கட்டில்கிடையாக்குவேன் என்று கூறியதன்மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தினார் என்று நாம் அறிவ தில்லை. ஒருவேளை இயேசு, அவர்களை உணர்வுக்குக் கொண்டு வருவதற்கு உடல்ரீதியான வியாதியையும் மரணத்தையும் பயன்படுத்தியிருக்கலாம். ஒருவேளை ஆவிக்குரிய சுகவீனமும் மரணமும் அர்த்தப்படுத்தப் பட்டிருக்கலாம். இயேசு எதை அர்த்தப்படுத்தியிருந்தாலும், அது மனந்திரும்பாதவர்களுக்கு மகிழ்ச்சியான வேளையாய் இருந்திருக்காது. [33]KJV

வேதாகமத்தில் "reins" என்றுள்ளது. "சிந்தைகள்" (அல்லது "reins") என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "சிறுநீரகங்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. இன்றைய நாட்களில் நாம், பிரியத்தின் மையமாக "இருதயம்" என்பதைப் பற்றிப் பேசுகின்றோம், இருப்பினும் இரத்தத்தை உடல்முழுவதிலும் விசையுடன் அனுப்புகிற உடல்ரீதியான இருதயம் என்பது பிரியத்தின் உண்மையான ஆதாரமூலமாக இருப்பதில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பாக, மனிதர்கள் "சிறுநீரகம்" என்பது மனவிருப்பத்தின் மையமாக இருந்ததாகக் கூறினர், இருப்பினும் அது சிறுநீரகம் என்று அழைக்கப்பட்ட உறுப்பிற்கு நேரடியாக உண்மையான விஷயமாக இருந்ததில்லை. [34]மத்தேயு 16:27; ரோமர் 2:6; 2 கொரிந்தியர் 5:10; 11:15; வெளிப்படுத்தின விசேஷம் 20:11, 12 ஆகிய வசனங்களைக் காணவும். [35]முன்பே உரைக்கப்பட்டபடி, ஏழு அடிப்படைக் கூறுகள் இந்தக் கடிதங்களை வடிவமைத்திருப்பினும், அவ்வப்போது சில மாறுதல்கள் உள்ளன. பின் வருவது அப்படிப்பட்ட ஒரு மாறுதலாக உள்ளது: அந்த சபையில் "உண்மையுள்ளவர்களாய் இருந்த ஒரு சிலருக்கு" எடுத்துரைக்க இயேசு சற்றே நிறுத்தினார். [36]சபையில் திருத்தும் ஒழுங்கு நடவடிக்கை மூப்பர்களால் மாத்திரம் தொடங்கி வைக்கப்பட வேண்டும் என்ற மனப்பதிவை விட்டுச்செல்ல நான் விரும்பவில்லை. நான் இரண்டு கருத்துக்களை வலியுறுத்த விரும்புகின்றேன்: (1) சபையில் ஒழுங்கு நடவடிக்கை செயல்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்போது தேவனால் நியமிக்கப்பட்ட நடத்துநர்கள் என்ற வகையில், மூப்பர்கள் தொடக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். (2) சபையின் நடத்துநர்கள், சிலரிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதற்கு எதிராக இருக்கும்போது, தொடங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை செயல்விளைவுள்ளதாக இருப்பதென்று மிகவும் கடினமானதாகி விடுகிறது. [37]"பாரம்" என்பது என்ன என்பது பற்றி ஒவ்வொரு விளக்கவுரையாளரும் சற்றே மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளனர், ஆனால் இது, ஏதோ ஒருவகையில், இயேசுவின் சித்தம் பற்றிய குறிப்பாக உள்ளது என்று பெரும்பான்மையானவர்கள் நம்புகின்றனர். மற்ற இரு வசனப்பகுதிகளில் "பாரம்" என்ற வார்த்தையின் பயன்பாட்டைக் கவனிக்கும்படி பல எழுத்தாளர்கள் அழைக்கின்றனர்: மத்தேயு 11:28-30ல், "பாரம்" என்பது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலைக் குறிக்கிறது. நடபடிகள் 15:28, 29ல் "பாரம்" என்பது குறிப்பிட்ட சில அடிப்படைக் கட்டளைகளுக்குப் புறஜாதிக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிய வேண்டிய பொறுப்பைக் குறிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 2:24ன் "பாரம்" என்பது, கிறிஸ்தவர்கள் செய்யும்படி யேசபேல் ஊக்கப்படுத்திக் கொண்டிருந்த பாவங்களில் இருந்து விலகியிருக்க வேண்டிய அவசியத்தைக் குறிக்கிறது என்று சிலர் முடிவு செய்கின்றனர். [38]ஒருவருடைய கிறிஸ்தவ சாட்சியானது சமரசப்படுத்தப் படுகையில், சபைக்குழுமத்தை விட்டு நீங்கிச் செல்லுதல் என்பது சிலவேளைகளில் அவசியமானதாக உள்ளது, ஆனால் தியத்தீராவிலோ அல்லது எனது நண்பர் ஆராதித்த சபையிலோ விஷயம் இதுவாக இருந்தது என்பதை எதுவும் சுட்டிக் காண்பிப்பதில்லை. [39]வசனம் 22ல் உள்ள "அவளுடைய கிரியைகள்" மற்றும் வசனம் 26ல் உள்ள "என் கிரியைகள்" ஆகியவற்றிற்கு இடையில் நேர்மாறு ஒன்று காணப்படுகிறது. தியத்தீராவில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒரே வேளையில் யேசபேலின் கிரியைகளையும் இயேசுவின் கிரியைகளையும் செய்யக் கூடாதிருந்தது. [40]சங்கீதம் 2:9ஐ அந்தச் சங்கீதம் முழுவதற்குமான சந்தர்ப்பப் பொருளில் ஆழ்ந்து சிந்தியுங்கள்.

[41]சுக்கிரன் தான் மிகப்பொதுவான "விடிவெள்ளி நட்சத்திரமாக" உள்ளது, ஆனால் அவ்வப்போது இது (விடிவெள்ளி நட்சத்திரம் என்பது) செவ்வாய் கிரகம் என்பதாகவும் உள்ளது. [42]Charles R. Swindoll, *Letters to churches ... Then and Now* (Ful-

lerton, Calif.: Insight for Living, 1986), 29. *எனது நடைமுறைப் பயன்பாடுகளில் இரண்டு ஸ்வின்டால் அவர்களுடையதைப் போன்றவையாக உள்ளன; மற்ற இரண்டு மாறுபட்டுள்ளன.* [43]Ibid., 29. [44]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், தேவனுடன் சரியாக இருப்பதற்கு, விலகியிருக்கும் பாவி என்ன செய்யவேண்டியது அவசியம் என்பதையும் தவறு செய்கின்ற தேவனுடைய பிள்ளைகள் என்ன செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் விளக்கப்படுத்துங்கள் (நடபடிகள் 2:38; 8:22).* [45]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 119.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலாவது நாம் தியத்தீராவைப் பற்றி வாசிக்கின்றோமா?*
2. *தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட கடிதம், ஏழு கடிதங்களிலும் மிகவும் நீண்டதாக இருப்பது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?*
3. *தியத்தீராவின் தொழிற்குழுக்களினால் கிறிஸ்தவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட இக்கட்டு பற்றிக் கலந்துரையாடவும். அந்த சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்திருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
4. *இந்தக் கடிதத்தில் இயேசுவைப் பற்றிய விவரிப்பைக் கலந்துரையாடவும். தியத்தீரா சபைக்கு அதிகாரத்தின் இந்தச் சித்தரிப்பு அவசியமாயிருந்தது என்று நீங்கள் நினைப்பது ஏன்?*
5. *இந்த சபைக்குழுமத்தின் நற்குணங்கள் யாவை?*
6. *பழைய ஏற்பாட்டின் யேசபேலைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளவற்றைக் கூறவும். தியத்தீராவில் இருந்த யேசபேல் எவ்வகையில் அவளைப் போல் இருந்தாள்? எவ்வகையில் இவள் மாறுபட்டவளாய் இருந்தாள்?*
7. *புதிய ஏற்பாட்டு போதனையின்படி பெண்கள் சபையின் மூப்பர்களாக இருக்கவும், பொது கூடுகைகளில் நடத்துநர்களாய் இருக்கவும் முடியாது என்றாலும், இது அவர்கள் செல்வாக்கு எதையும் கொண்டிருப்பதில்லை என்று அர்த்தப்படுகிறதா? யேசபேல் தீமைக்கான ஏராளமான செல்வாக்கு கொண்டிருந்தாள். நன்மைக்கு ஏராளமான செல்வாக்கைப் பயன்படுத்திய கிறிஸ்தவப் பெண்கள் சிலரைப் பற்றிக் கூறவும்.*
8. *யேசபேலையும் அவளைப் பின்பற்றியவர்களையும் சபையானது ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தாமல் இருந்ததற்குச் சாத்தியக் கூறுள்ள சில காரணங்கள் யாவை?*
9. *யேசபேல் மனந்திரும்புவதற்குத் தேவன் நேரம் (தவணை) கொடுத்த உண்மை பற்றிக் கலந்துரையாடவும். துன்மார்க்கர்*

*மனந்திரும்பத் தேவன் நேரம் கொடுத்த மற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பற்றி நீங்கள் நினைக்க முடிகிறதா?*

10. *மனந்திரும்பாதவர்களை உபத்திரவத்தின் படுக்கையிலும் மாபெரும் துன்பத்திலும் எறிந்து விடுவதாக இயேசு கொடுத்த எச்சரிக்கை எதனை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?*
11. *சபைக்குழுமம் இருக்க வேண்டிய முறைப்படி இல்லாதிருப்பினும் (நாம்) தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருத்தல் சாத்தியமா? மூப்பர்களினால் மேற்கொள்ளப்படும் சில முடிவுகளில் நாம் கருத்து வேறுபடுவதால் மாத்திரம், அந்த சபைக்குழுமத்தை விட்டு நாம் நீங்கிப் போக வேண்டுமா?*
12. *இப்போது நாம் எந்தக் கருத்தில் கிறிஸ்துவுடன் ஆளுகைசெய் கின்றோம்?*
13. *நீங்கள் எப்போதாவது, ஆகாயத்தில் விடிவெள்ளி நட்சத்திரத்தைக் கண்டுள்ளீர்களா? வெளிப்படுத்தின விசேஷத்தில் "விடிவெள்ளி நட்சத்திரமாக" இருப்பது எது (அல்லது யார்)?*